27.02.2019.அ.வ.எண்.63/2007

வா.சா.2, அன்பழகன்

பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தில் தற்பொழுது வாதியான என்னுடைய தாயார் மட்டும் தான் குடியிருந்து வருகின்றார் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்திரணம் 47 செண்டு இடமாகும். என்னுடைய நிருபண பிரமாண பத்திரிகையில் தாவா சொத்தின் மொத்த விஸ்திரணம் 37 செண்டு இடம் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல 47 செண்டு இடம் என்று தான் குறிப்பிட்டுள்ளேன். 47 செண்டு இடமும் என்னுடைய தந்தையான லோகநாதனின் பெயரில் தான் உள்ளது. தாவா சொத்து என்னுடைய தந்தையின் பெயரில் உள்ளது என்பதனை காட்ட எதாவது ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வரி ரசீது மற்றும் பட்டா போன்ற ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாவை தான் இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் அதில் 3 செண்டு இடத்திற்கு தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 47 செண்டு இடத்திற்கு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். 3 செண்டு இடம் சுற்றிலும் எங்களுடைய 47 செண்டு இடம் அமைந்துள்ளது. வா.சா.ஆ.2 பட்டா எவ்வளவு விஸ்திரணத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் 800 சதுர மீட்டர் இடத்தில் அமைந்துள்ள எங்களுடைய வீட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது. 800 சதுர மீட்டர் இடம் 20 செண்டு இடமாகும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்னுடைய தந்தையுடன் பிறந்த நபர் ஆவார். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பங்கு உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பங்கு இல்லை என்ற விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்திற்கான பட்டாவில் பிரதிவாதிகளின் பெயரில் உள்ளதை இவ்வழக்கில் அவர்கள் தாக்கல் செய்துள்ளனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 20 செண்டு இடம் எங்களுக்கும் 19 செண்டு இடம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக வருவாய் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறாகும். 19 செண்டு இடத்தை பிரதிவாதிகள் விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியும். அந்த விற்பனையை எதிர்த்து நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அந்த வழக்கின் எண் எனக்கு தெரியுமா என்றால் தற்பொழுது ஞாபகம் இல்லை. அந்த வழக்கு 2016 ஆம் ஆண்டு தாக்கல் செய்தோம். பிரதிவாதிகள் அவர்களுடைய இடத்தை 2017 ஆம் ஆண்டு தான்

கிரையம் செய்து கொடுத்தனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 19 செண்டு இடத்தை கிரையம் பெற்ற நபர்கள் எனக்கு எதிராகவும் என்னுடைய தாயாருக்கு எதிராகவும் அ.வ.எண்.482/2016 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் 20 செண்டு இடத்திற்கு மேலாக எங்களுக்கு எந்த ஒரு இடமும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்களுடைய அனுபவத்தில் உள்ளதனை காட்ட அதற்குரிய வரி ரசீது மற்றும் மின் கட்டண ரசீதுகளை நாங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.1-ன் நிருபண பிரமாண பத்திரிகையில் 47 செண்டு இடம் என்று குறிப்பிடவில்லை என்றும் 800 செண்டு மீட்டர் என்று தான் குறிபிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையின் படி பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு நிலுவையில் உள்ளது. வா.சா.ஆ.8 புகைப்படத்திற்கு நெகட்டிவ் மற்றும் சீ.டி. ஆகியவைகள் உள்ளனவையா என்றால் இல்லை. அந்த புகைப்படங்கள் குறிப்பிட்ட தேதிகளில் தான் எடுக்கப்பட்டதனை காட்ட எதாவது ஆவணங்கள் உள்ளதா என்றால் அதற்குரிய ரசீது உள்ளது ஆனால் அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வேண்டி பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)